மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உசிலம்பட்டி
முன்னிலை : திரு.சு. மகாராஜன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1
2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை
**சி.சி.எண்.15/2021**

அரசுக்காக: சார்பு ஆய்வாளர்,
உசிலம்பட்டி தாலுகா
காவல் நிலைய கு.எண்.1211/2020 ... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

வரதராஜ்,
த/பெ. பால்ச்சாமி ... எதிரி

| | | |
|---|---|---|
| | **சி.சி.எண்.15/2021** | |
| 2 | காவல் நிலைய பெயர் குற்ற எண் | உசிலம்பட்டி தாலுகா கா. நி.குற்ற எண்.1211/2020 |
| குற்றம் சாற்றப்பட்டவர் குறித்த விபரம் | | |
| 3 | எதிரியின் பெயர் : | வரதராஜ் |
| 4 | எதிரின் தந்தை / கணவர் பெயர் : | த.பெ. பால்ச்சாமி |
| 5 | தொழில் | கூலி |
| 6 | முகவரி | பூதிபுரம், உசிலம்பட்டி தாலுகா |
| 7 | வயது | -- |
| தேதி விபரங்கள் | | |
| 8 | சம்பவம் | 11.08.2020 |
| 9 | புகார் | 11.08.2020 |
| 10 | கைது தேதி | -- |
| 11 | பிணை விடுப்பு | Anticipatory bail |
| 12 | Committal | N.A |
| 13 | விசாரணை துவக்கம் | 11.07.2022 |
| 14 | விசாரணை முடிவு | 23.09.2024 |
| 15 | தண்டனை (அ) ஆணை | குற்றவாளி இல்லை |
| 16 | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | இல்லை |
| Case Summary | | |
| 17 | Period of Remand of the accused | -- |
| 18 | Date of filing of the final report | 07.08.2021 |
| 19 | Date of Questioning under Sections 240, 246 & 251 Cr.P.C. | 11.07.2022 |

<table>
<tr><td>20</td><td>Miscellaneous Petition and their results</td><td>u/s.320(2) CrPC petition filed and dismissed.</td></tr>
<tr><td>21</td><td>Date of examination in chief and cross</td><td><table><tr><td>P.W.</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>1.</td><td>18.09.2024</td><td>18.09.2024</td></tr><tr><td>2.</td><td>18.09.2024</td><td>18.09.2024</td></tr><tr><td>3.</td><td>18.09.2024</td><td>18.09.2024</td></tr></table></td></tr>
<tr><td>22</td><td>Date of examination accused under Section 313 Cr.P.C.</td><td>23.09.2024</td></tr>
<tr><td>23</td><td>Details of abscondence of accused and his appearance / production</td><td>Nil</td></tr>
<tr><td>24</td><td>Grant of stay by Superior Court and the results there of</td><td>Nill</td></tr>
<tr><td>25</td><td colspan="2">காலதாமதத்திற்கான காரணம் : மேற்படி வழக்கில் இறுதி அறிக்கை புலன் விசாரணை அதிகாரியால் 05.10.2020 அன்று தயார் செய்யப்பட்டு 07.08.2021 அன்று இந்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. 07.08.2021 அன்று எதிரி மீதான குற்றத்தை கோப்பிற்கு எடுத்து அதன் பின் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டுள்ளது. எதிரிடம் 11.07.2022ம் தேதியன்று முதல் நிலை விசாரணை செய்தும், பின்னர் சாட்சிகள் விசாரித்தும் எதிரிடம் கு.வி.மு.ச பிரிவு 313ன் கீழ் விசாரணை செய்தும், இந்நாளில் தீர்ப்புரை பகரப்படுகிறது.</td></tr>
</table>

இவ்வழக்கானது 07.08.2021ம் தேதி இந்நீதிமன்றத்தின் கோப்புக்கு எடுக்கப்பட்டு, இன்று இறுதியாக என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசுக் குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை –1 திருமதி.G.முத்துவள்ளி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.M. இராஜா அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்து இருதரப்பும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கின் சாட்சி 1 சதீஷ் என்பவர் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, பூதிபுரம் வடக்குதெருவில் அவரது குடும்பத்துடன் குடியிருந்து லாரி டிரைவராக வேலை செய்து வருவதாகவும், சாட்சி 1ற்கு கிரிஜா என்ற மனைவியும், இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர் என்றும், சாட்சி 1ன் மனைவி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கோபித்து கொண்டு அவரது அம்மா வீட்டில் இருந்து வருகிறார் என்றும், இதனால் கிரிஜாவின் சித்தப்பாவும், இவ்வழக்கின் எதிரியுமான பால்ச்சாமி மகன் வரதராஜ் சாட்சி 1ன் மீது விரோதமாக இருந்துள்ளதாகவும், இந்நிலையில் கடந்த 11.08.2020ம் தேதி இரவு சுமார் 20.00 மணிக்கு சாட்சி 1 சதீஷ் மற்றும் சாட்சி 2 பூங்கொடியும் சங்கிலி கருப்பு கோவில் அருகே உள்ள அவர்களது வீட்டு முன்பு நின்றிருந்த போது மேற்படி

எதிரி கையில் கத்தியுடன் வந்து மேற்படி இருவரையும் பார்த்து தேவுடியா மகனே, அவுசாரி மகனே நீ என்ன பெரிய சண்டியராடா என்று சத்தம் போட்டு கத்தியால் சாட்சி 1யைக் குத்த வந்தபோது அருகில் இருந்த சாட்சி 2 குறுக்கே வந்து தடுத்ததால் எதிரி கத்தியால் சாட்சி 2ன் இடது பக்க நெற்றியில் கிழித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், கீழே கிடந்த கம்பை எடுத்து சாட்சி 1ன் இடது கை மணிக்கட்டில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், எதிரி சாட்சி 1யைப் பார்த்து இன்று நீ தப்பித்துக் கொண்டாய் என்னைகிருந்தாலும் உன்னைக் குத்தி கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியைக் காட்டி மிரட்டியதாகவும் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 323, 506(ii) & 4 of TNPWH Actன்படி உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி அழைப்பாணை பேரில் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசுத் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு குவிமுச பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கி போதிய கால அவகாசம் கொடுத்து குற்றங்கள் பற்றி வினவியபோது குற்றங்களை எதிரி மறுத்துரைத்துள்ளார். பின்னர் அரசுத் தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 323, 506(ii) & 4 of TNPWH Actன்படி குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது குற்றச்சாட்டுகளை எதிரி மறுத்துரைத்துள்ளார்.

3. இவ்வழக்கின் எதிரி குற்றங்களை மறுத்துள்ளதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு, அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் செய்யப்பட்டுள்ளன.

4. இவ்வழக்கின் எதிரி குற்றங்களை மறுத்துள்ளதால், அரசுத் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கானது நிலுவையில் இருந்தபோது, இருதரப்பும் சமாதானமாக போவதாக மனுத்தாக்கல் செய்தனர். எதிரி மீதான குற்றங்கள் சமாதானமாக போக முடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பின்பு வழக்கில் புகார் கொடுத்த சதீஷ் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டார் என்றும், அவர் அவரது சாட்சியத்தில் எதிரியை அவருக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு குடும்ப பிரச்சனை காரணமாக அவர் மீது மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டார் என்றும், அந்த

புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், தற்போது அவரும், எதிரியும் சமாதானம் செய்து கொண்டார்கள் என்றும், போலீசார் புகார் சம்பந்தமாக அவரை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

4(2) மேலும், சம்பவத்தின் போது உடனிருந்ததாக சொல்லப்பட்டுள்ள சாட்சிகளான அ.சா.2 அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

4(3) எனவே, புகார் குறித்து சாட்சியமளித்த அ.சா.1 சம்பவம் குறித்து சாட்சியமளிக்காமல் அரசுத்தரப்புக்கு எதிராக சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்கொண்டு சாட்சிகளை விசாரிப்பதால் எவ்வித பயனும் இல்லை எனக்கருதி அரசுத்தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவ்வழக்கின் தலைமை காவலர் திரு.திருப்பதி அவர்கள் அ.சா.3ஆக விசாரிக்கப்பட்டார்.

4(4) அவரது சாட்சியத்தில், அவர் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், அவருக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் ரவி மற்றும் சார்பு ஆய்வாளர் திவ்யா ஆகியோரையும், அவரது கையொப்பத்தையும் அவருக்கு நன்கு தெரியும் என்றும், அவர் வழக்கு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், கடந்த 11.08.2020ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்தபோது 21.00 மணியளவில் இருந்தபோது சதீஷ் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பொருத்து நிலைய குற்ற எண்.1211/2020 இதச பிரிவுகள் 294(b), 324. 323. 506(ii), 379 (NP) & 4 of TNPWH Actன்படி வழக்கு பதிவு செய்து, அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், அன்றையதினமே சார்பு ஆய்வாளர் திவ்யா வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 22.30 மணியளவில் சம்பவ இடம் சென்று டார்ச் லைட் வெளிச்சத்தில் சாட்சிகள் சதி என்ற பெருமாள் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு படம் வரைந்து அ.சா.ஆ.3 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்பு சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்களையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு காயம்பட்ட சாட்சிகள் சதீஷ் மற்றும் பூங்கொடிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தேன்மொழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.5 மற்றும்

அ.சா.ஆ.6 காயச்சான்றுகள் பெற்றுள்ளார் என்றும், எதிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுள்ளார் என்றும், பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் புலன்விசாரணையில் தங்கசெயின் எதுவும் காணாமல் போகவில்லை என தெரியவந்ததால் மேற்சொன்ன சட்டப்பிரிவுகளில் இருந்து இதச 379 மட்டும் நீக்கம் செய்து மற்ற பிரிவுகளின் கீழ் அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டன.

5. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் விபரங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன்படி வினவியபோது, சாட்சிகளின் சாட்சியங்கள் பொய் என்றும், பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் பதில் அளித்தார். எதிரி தரப்பில் ஒருவரும் விசாரிக்கப்படவில்லை.

**6. தீர்வுக்குரிய பிரச்சனை:**

புகார்தாரர் தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் புகார் கொடுத்த சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3, ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்கக்கூடியவராக சொல்லப்பட்டிருந்தாலும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்துள்ளதாகவும், புகார் கொடுத்த புகார்தாரரும், மற்ற சாட்சிகளும் சம்பவம் பற்றி சாட்சியமளிக்காமல் அரசுத் தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார்கள். எனவே, விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 3 சாட்சிகளின் சாட்சியத்தை எதிரியின் குற்றங்களுடன் தொடர்புபடுத்தி சாட்சியமளிக்காத நிலையில், எதிரியின் குற்றங்களுடன் தொடர்புபடுத்தி வேறு தனிப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் எதுவும் இல்லை. இந்நிலையில், பாதிக்கப்பட்ட அ.சா.1யை விசாரணை செய்த கூடுதல் சாட்சிகளான தலைமை காவலர் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரியைக் குற்றங்களுடன் தொடர்புபடுத்த இயலாது என்பதால் எதிரி மீதான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், எதிரியை இதச பிரிவுகள் 294(b), 324, 323, 506(ii) & 4 of TNPWH Actன்படி குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது

இவ்வழக்கில் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் அவையறிய பகரப்பட்ட தீர்ப்புரையாகும்.

(ஒம்)சு. மகாராஜன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1
உசிலம்பட்டி.

<u>அட்டவணை:</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 சதீஷ்
அ.சா.2 பூங்கொடி
அ.சா.3 திருப்பதி

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

அ.சா.ஆ.1 புகார் மனு
அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.3 பார்வை மகஜர்
அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.5 காயச்சான்று
அ.சா.ஆ.6 காயச்சான்று
அ.சா.ஆ.7 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> : இல்லை

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> : இல்லை

(ஒம்)சு. மகாராஜன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1
உசிலம்பட்டி.

<u>குறிப்பு :–</u>

1. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பின் நகல் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

உண்மை நகல்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1
உசிலம்பட்டி.